



புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆத்தங்கரை விடுதி முதல் வெள்ளாளவிடுதி சாலையில் நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.9.88 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உயர்மட்ட பாலத்தினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் நேற்று முன்தினம் (13.09.2025) திறந்து வைத்தார்கள். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் கண்காணிப்பு குழு உறுப்பினர் எம்.பரமசிவம், கோட்டப்பொறியாளர் வா.சீனிவாசன், உதவி கோட்டப்பொறியாளர் சா.திராவிடமணி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவிற்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர்கள். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது என மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என மாவட்ட செயலாளர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்து சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### பேறறிஞர் அண்ணா 117 வது பிறந்த நாள் இன்று புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள

# 801 பாகங்களில் உறுதி மொழி ஏற்பு! அறந்தாங்கியில் மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்ட செயலாளர்-அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, செப்.15-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவித்தபடி புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள 801வாக்குச் சாவடிகளிலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளான செப்டம்பர் 15 திங்கட்கிழமை அன்று பாகம் வாரியாக பி.எல்.ஏ.2, பி.டி.ஏ., பி.எல்.சி. ஆகியோர் பங்கேற்கும் வாக்குச் சாவடி கூட்டங்களை நடத்தி, ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் படி கழகத்தில் உறுப்பினர்களாக இணைந்த குடும்பங்களை அழைத்து அவர்களையும் பங்கு பெறச் செய்து அக்கூட்டங்களில் அனைவரும் இணைந்து உறுதி மொழி ஏற்றிட வேண்டும் என்று மாவட்டக் கழக செயலாளர் இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் காணொலி மூலமாக மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தாய்ப்பான அறிவிப்பினை அறி வித்தார். கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின் படி செப்டம்பர் 15 திங்கட்கிழமை அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளன்று தமிழ் நாடு முழுவதுமுள்ள 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் ஓரணியில் இயக்கத்தில் தமிழ்நாடு இணைந்த குடும்பங்கள் ஒன்று கூடி மண், மொழி, மானம் காப்பதற்கான உறுதி மொழியை முன்மொழிய வேண்டும். ஒவ்வொரு பாகத்திலும் பள்ளி மைதானங்கள், சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங்களில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் இணைந்த குடும்பங்களை அழைத்து நிகழ்ச்சி நடத்திட வேண்டும். என வாக்குச்சாவடி, வலி மையான வாக்குச்சாவடி, என்பதை உணர்த்திடும் வகையில் அந்தந்த பாகத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணியினர் கட்டாயம் வாக்குச் சாவடி கூட்டங்களை நடத்திடு வது மட்டுமின்றி உறுதி மொழியையும் ஏற்றிட வேண்டும். குறிப்பாக பி.எல்.ஏ.2. பி.டி.ஏ., பி.எல்.சி, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் என குறைந்த பட்சம் 100 பேர்களாவது ஒவ்வொரு கூட்டங்களிலும் கலந்து கொள்ளும் வகையில் கழக நிர்வாகிகள் வழி காண வேண்டும்.

காலை 9 மணிக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி கொண்டாடுவது மட்டுமின்றி, அவ்விடத்திலே அனைவரும் உறுதி மொழி ஏற்றிடும் வகையில் நிகழ்ச்சிகளை அமைத்திட வேண்டும். நமது புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் 801 பாகத்திலும் உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியை அனைவரும் ஒன்றிணைந்து நடத்திட வேண்டு

மாய் கேட்டுக் கொள்கிறேன். நாம் உறுதி மொழி ஏற்றிடும் வாசகம்.

நான் தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகி தாசாரத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன். தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என உறுதி ஏற்கிறேன். நான் வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக் கும் அரசுக்கு எதிராக நிற்பேன். தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாடேன் என உறுதி ஏற்கிறேன்.

நான், நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன், நம் மாணவர்களுக்கு உரிய கல்வி நிதிக்காகப் போராடுவேன். ஒரு போதும் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன். நான், தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என உறுதி ஏற்கிறேன்.

நான், பெண்கள், விவசாயி கள், மீனவர்கள், நெசவாளர்கள் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ் நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என உறுதி

ஏற்கிறேன்

என்று நாம் ஒவ்வொருவரும் தமிழ்நாட்டினை மேம்படுத்திட, தமிழ் நாட்டை பாது காத்திட, தமிழ் மக்களின் உரிமையை பாதுகாத்திட நமது கழகத் தலைவர் அவர்களின் வழியில் இவ்வாறு உறுதிமொழியை ஏற்று; வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் முத லமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் திராவிட மாடல் அரசு அமைய பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதிமொழி ஏற்பதோடு இதனையே நாம் அனைவரும் சபதமாக ஏற்க வேண்டுமாய் கேட் டுக் கொள்கிறேன்

மேலும் செப்டம்பர் 15 அன்று வட்ட கழகத்திற்குட்பட்ட வாக்குச்சாவடி முக வர்கள் மற்றும் ஓரணியில் தமிழ் நாடு திட்டத்தின் மூலம் கழத்தில் இணைந்த குடும்பத்தினரையும் அழைத்து நமது புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் அடங்கிய 801பாகத்திலும், கழக நிர்வாகிகள், 100 பேர் களை அழைத்து உறுதிமொழி எடுத்துக்கொள்ளுமாறு கழக நிர்வாகிகளை கேட்டுக்கொள்கிறேன்.

முன்னதாக அறந்தாங்கி பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது

நிகழ்வுகளில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், , முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாநகர,ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள்,

உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை விடுத்துள்ளார்.

### பேறறிஞர் அண்ணா 117 வது பிறந்த நாள் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் உள்ள

# 690 பாகங்களில் உறுதி மொழி ஏற்பு! பேறறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை !

புதுக்கோட்டை. செப்.15-

மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் காணொலி மூலமாக மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தாய்ப்பான அறிவிப்பினை அறி வித்தார். கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின் படி செப்டம்பர் 15 திங்கட்கிழமை அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளன்று தமிழ் நாடு முழுவதுமுள்ள 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் ஓரணியில் இயக்கத்தில் தமிழ்நாடு இணைந்த குடும்பங்கள் ஒன்று கூடிமண், மொழி, மானம் காப்பதற்கான உறுதி மொழியை முன்மொழிய வேண்டும். ஒவ்வொரு பாகத்திலும் பள்ளி மைதானங்கள், சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங்களில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் இணைந்த குடும்பங்களை அழைத்து நிகழ்ச்சி நடத்திட வேண்டும். என வாக்குச்சாவடி, வலிமையான வாக்குச்சாவடி, என்பதை உணர்த்திடும் வகையில் அந்தந்த பாகத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி யினர் கட்டாயம் வாக்குச்சாவடி கூட்டங்களை நடத்திடு வது மட்டுமின்றி உறுதி மொழியையும் ஏற்றிட வேண்டும். குறிப்பாக பி.எல்.ஏ.2. பி.டி.ஏ., பி.எல்.சி, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் என குறைந்த பட்சம் 100 பேர்களாவது ஒவ்வொரு கூட்டங்களிலும் கலந்து கொள்ளும் வகையில் கழக நிர்வாகிகள் வழி காண வேண்டும்.

காலை 9 மணிக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி கொண்டாடுவது மட்டுமின்றி, அவ்விடத்திலே அனைவரும் உறுதி மொழி ஏற்றிடும் வகையில் நிகழ்ச்சிகளை அமைத்திட வேண்டும். நமது புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் 690 பாகத்திலும் உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியை அனைவரும் ஒன்றி ணைந்து நடத்திட வேண்டு

மாய் கேட்டுக் கொள்கிறேன். நாம் உறுதி மொழி ஏற்றிடும் வாசகம்.

நான், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதாசாரத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன். தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட் டேன் என உறுதி ஏற்கிறேன். நான், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக் கும் அரசுக்கு எதிராக நிற்பேன். தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாடேன் என உறுதி ஏற்கிறேன்.

நான், நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன், நம் மாணவர்களுக்கு! உரிய கல்வி நிதிக் காகப் போரா டுவேன். ஒரு போதும் தமிழ் நாட்டை தலை குனிய விட மாட்டேன். நான், தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என உறுதி ஏற்கிறேன்.

நான், பெண்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ் நாட்டைத் தலைகுனிய விட மாட்டேன் . உறுதி ஏற்கிறேன்

என்று நாம் ஒவ்வொருவரும் தமிழ்நாட்டினை மேம்படுத்திட, தமிழ் நாட்டை பாதுகாத்திட, தமிழ் மக்களின் உரிமையை பாதுகாத்திட நமது கழகத் தலைவர் அவர்களின் வழியில் இவ்வாறு உறுதிமொழியை ஏற்று; வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் முத லமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் திராவிட மாடல் அரசு அமைய பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதிமொழி ஏற்பதோடு இதனையே நாம் அனைவரும் சபதமாக ஏற்க வேண்டுமாய் கேட் டுக் கொள்கிறேன்

மேலும் செப்டம்பர் 15 அன்று வட்ட கழகத்திற் குட்பட்ட வாக்குச்சாவடி முக வர்கள் மற்றும் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் மூலம் கழத்தில் இணைந்த குடும்பத்தினரையும் அழைத்து: நமது புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் அடங்கிய 690 பாகத்திலும், கழக நிர்வாகிகள், 100 பேர் களை அழைத்து உறுதி மொழி எடுத்துக்கொள்ளுமாறு கழக நிர்வாகிகளை கேட்டுக் கொள்கிறேன்.

முன்னதாக பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 117வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2025 திங்கள்கிழமை காலை 9 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், , முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாநகர,ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள்,

உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை விடுத்துள்ளார்.

### ப.செல்வம் தலைமை! நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

# கரூர் முப்பெரும் விழாவில் பெரும் திரளாக கலந்து கொள்வோம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை. செப். 15-

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். தொகுதி பார்வையாளர்கள் ஆர்.அருள்செல்வம், இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், க.மறைமலை, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் ஆரூர் மணிவண்ணன், கற்பகம்நிலமேகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறை வேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சிக்கல் என்.ஆனந்த், சோ.பா.மலர்வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் மா.மீ.புகழேந்தி, இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், முகமதுசுல்தான், சி.சுப்பரமணியன், மரியசார்லஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி.சார்லஸ், கோ.சிவக்குமார், இல.பழனியப்பன், எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, இரா.முருகையன், ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, கேஸ் வீ.செந்தில், கே.எஸ்.சாகுல் ஹமீதுராஜா, க.சத்தியமூர்த்தி, இளம்.சுந்தர், த.தமயந்தி, எஸ்.வெற்றிச்செல்வன், எஸ்.பாலமுரளி, ஆர்.சுரேந்தர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தி.கலையரசன், ஆர்.கே.சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் பகுத்தறிவு பகலவன் தந்தை பெறியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்த நாள் விழா, திராவிட முன்னேற்ற கழகம் உதயம் ஆன நாள் விழா என முப்பெரும் விழாவாக வரும் 17.9.2025 அன்று கரூரில் நடைபெற உள்ளதில் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் இருந்து பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்றும், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அன்பு வேண்டுகோளுக்கிணங்க ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்கையில் நமது நாகை மாவட்டத்தில் 40 சதவீத இலக்கை எட்டிட ஒத்துழைத்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களுக்கும், மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், சார்பு அணியினருக்கும், பாக நிலை முகவர்கள், பாக டிஜிட்டல் முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வது என்றும், செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா, செப்டம்பர் 17 தந்தை பெரியார் ஆகியோரின் பிறந்த நாள் அன்று மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சிலைகளுக்கு மாலை அணிவித்தும் மேலும் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளை, வார்டுகள் தோறும் அண்ணா, பெரியார் படங்களை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும் என்றும், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க நாகை மாவட்டத்தில் வார்டு, கிளை கழகங்கள் தோறும் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது. இன்னும் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்தப்படாமல் உள்ள வார்டுகள், கிளைகள் தோறும் உடன் கூட்டத்தை கூட்டிட வேண்டும் என்றும், இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் செய்திட வேண்டும்



என்றும், இலண்டன் மாநகரில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் சுயமரியாதை சுடரொளி, பகுத்தறிப் பகலவன் தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து உரையாற்றிய கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் மனமார்ந்த நன்றையியும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வது என்றும், கழகத்தலைவர், திராவிட மாடல் முதல்வர் தளபதி அவர்கள் தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்திட, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிக்க செய்திட இத்தாலி, ஜெர்மன் நாடுகளுக்கு சுற்று பயணம் மேற்கொண்டு தொழில் முதலீடாக ரூ. 13,016 கோடியும், அதன் மூலம் 17,813 பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மக்களின் நலனே உயிர் மூச்சாக கருதி அனுதினமும் உழைத்து கொண்டிருக்கும் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நன்றியையும், பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### பேறறிஞர் அண்ணா பிறந்த நாளில் மண், மொழி, மானம் காக்க

# தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட 883 பாகத்திலும் உறுதி மொழி ஏற்போம்!

## மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை!

தஞ்சாவூர் செப்.15-

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் மண், மொழி, மானம் காக்க தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட 883 பாகத்திலும் உறுதி மொழி ஏற்க தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : 09.09.2025 அன்று கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில், கழக தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி, நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் அன்று மண், மொழி, மானம் காக்க நம் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட 883 பாகத்திலும் அந்தந்த பாகத்தில் உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தில் புதிதாக இணைந்த குடும்பங்களை அழைத்து, பி.எல்.ஏ2, பி.டி.ஏ, பி.எல்.சிகளின் கூட்டங்களை நடத்தி, கழக கொடியேற்றி பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் திரு உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து உறுதிமொழி எடுக்க வேண்டுகிறேன்.

மேலும் கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க செப்டம்பர் 17 அன்று கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் நம் தஞ்சை வடக்கு மாவட்ட கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



குறிப்பு: தங்கள் பாகத்தில் எடுத்துக்கொண்ட உறுதிமொழி நிகழ்வினை, தெளிவான ஒரு புகைப்படம் எடுத்து அதனுடன் தங்களுடைய தொகுதி பெயர் மற்றும் பாக எண்ணை பதிவு செய்து கீழ் கண்ட எண்ணிற்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்கிறேன். கைபேசி எண்: 6383955629

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.



கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட கழகத்தின் சார்பில் "சுற்றுப்புறச் சூழல், இரத்ததானம், விழிப்புணர்வு "மாரத்தான் போட்டியை மாநகர் மாவட்டச் செயலாளர், நா.கார்த்திக் கொடியசைத்து துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இதில் கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி உள்பட மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக் குழுத்தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல் வீரர்கள், கழகத் தொண்டர்கள், (BLA2) பாகமுகவர்கள், (BLC) பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் (BDA) உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.